## இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை - 2014

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை அதிகாரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) உப பிரிவுகளின் பிரகாரம் தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் சபைக்கு ரூபா 41,330,074 தொகையான அரச மானியங்கள் கிடைத்திருந்ததுடன், அது வேறாக கணக்கொன்று மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இந்நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி கையேற்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக அறிக்கை பேணப்படாமல் இருந்ததுடன் அச்சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் காலக்கழிவு செய்தல் தொடர்பாக கணக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டு நியமங்கள்**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் முன்னைய ஆண்டுகளுக்குரிய தவறுகள் சரிசெய்தல் பின்னோக்கிய ரீதியில் சீராக்கம் செய்யப்பட்டு முன்னைய ஆண்டின் நிதி நிலைமையைச் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் ரூபா 9,520,133 தொகை மற்றும் ரூபா 3,938,310 தொகையான வரவு செலவுப் பதிவுகள் முறையே அரச மானியங்கள் மற்றும் திரட்டிய நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1999 ஆம் ஆண்டின் போது சபைக்கு உரித்துப் பொறுப்பேற்கப்பட்டிருந்த நாரஹேன்பிட்டியில் உள்ள 0.2022 ஹெக்டேயர் காணியின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்தமையால் ஏற்பட்டிருந்த ரூபா 328,671,316 தொகையான மீள்மதிப்பீட்டு மிகை, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் வேறாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதியத்தின் மீதியுடன் சேர்த்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் வெவ்வேறு செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தியமையால் 2011 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் ரூபா 691,212 தொகையான வியாபார கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு சபை மீளாய்வாண்டின் இறுதி வரையும் தவறியிருந்தது.

(ஆ) வரிசை அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 34,233 ஆன பழைய மீதியொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரிசி செயற்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டின் போது கடன் அடிப்படையில்

வெளிநபரொருவருக்கு வழங்கப்பட்டிருந்த அரசி மா இருப்பொன்றிற்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 80,328 தொகை 2015 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவலிலை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| | நிதிப் பிரமாணம் 110 | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடொன்று நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| | நிதிப் பிரமாணம் 756 | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 15 வாகனங்கள் காணப்பட்ட போதிலும், நிதிப் பிரமாணத்தின் பிரகாாம் வாகனங்கள் தொடர்பாக மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | நிதிப் பிரமாணம் 772 | மீளாய்வாண்டின் போது ஏற்பட்ட ரூபா 59,612 ஆன இருப்பு நட்டங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரி சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் (ஈ) மற்றும் (எ) பந்திகள் | நிலையான சொத்துக்களுக்காக பிரதான பேரேட்டில் கட்டுப்பாட்டுக் கணக்கொன்று பேணப்பட்டு பேரேட்டுக் கணக்குகள் அக்கட்டுப்பாட்டுக் கணக்குடன் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/ 2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. . |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் நிதி விளைவுகள் ரூபா 1,921,514 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,077,456 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,998,970 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டதுடன், ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 10,152,795 இனால் அதிகரித்திருந்த போதிலும், அரச மானியங்கள் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 17,108,316 ஆல் அதிகரித்திருந்தமை அதற்காக பிரதானமாக காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுயமான நிதியத்திலிருந்து செயற்படுத்தப்படும் 06 செயற்திட்டங்களிலிருந்து ரூபா 14,553,313 ஆன தேறிய இலாபமொன்றும், செயற்திட்டமொன்றிலிருந்து ரூபா 1,503,014 ஆன தேறிய நட்டமொன்றும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஹெல்திபுட் சிற்றுண்டிச்சாலையிலிருந்து 2014 திசெம்பர் வரையான காலப்பகுதியில் ரூபா 1,503,014 ஆன தேறிய இலாபமொன்று பெறப்பட்டிருந்ததுடன் மொத்த செலவினத்தில் 73 சதவீதம் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் செலவினங்களாக இருந்தமை இந்த தேறிய நட்டத்திற்கு காரணமாக இருந்தது.

### 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை 3 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 3,500,000 கடன் தொகை 2013 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டுத் தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதும், மீளாய்வாண்டு இறுதியளவில் அக்கடனில் ரூபா 625,000 மாத்திரமே திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது.

(அ) 2000 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 751,514 தொகையான கணக்காய்வுக் கட்டணங்கள் 2015 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அரசின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இணங்க அங்கத்துவம் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முகவர்களிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும், சர்வதேச பட்டினி ஒழிப்பு இயக்கம் மற்றும் ஏனைய அதற்குச் சமமான வெளிநாட்டு நிறுவனங்கள், சங்கங்கள் அல்லது சங்கங்களுடன் தொடர்புகளை பேணிச் செல்வதற்கு சபை தவறியிருந்தது.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 நவம்பர் 27 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது ஆட்சேர்ப்பு நடைமுறையிலுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்த தகுதியான ஊழியர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்காக தலைவருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்த போதிலும், ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு முரணாக இரண்டு முகாமைத்துவ உதவியாளர்கள் முன்னாள் தலைவரினால் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் தற்காலிக, அமைய (நாளாந்த), சமயா சமய, ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த, பதவிகளில் தொடர்ச்சியாக 180 நாட்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைக் பூர்த்தி செய்துள்ள ஊழியர்களுக்கு மாத்திரம் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டிய போதிலும், தொடர்ச்சியாக 180 நாட்கள் திருப்திகரமான சேவைக்காலத்தைக் பூர்த்தி செய்திராத 07 ஒப்பந்த

நியமனம் பெற்றிருந்தவர்களுக்கு 2014 நவம்பர் 18 ஆந் திகதி நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 28 ஆக இருந்த போதிலும், மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் 50 ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட்டமையால் உள்ளபடியான பதவியணியினர் 50 ஆல் அதிகரித்திருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அம்பலாந்தோட்டை பண்ணையின் கட்டிடங்களை பழுதுபார்த்தல், பயிர்ச்செய்கை கிணறொன்று அமைத்தல் மற்றும் 08 ஏக்கரில் பயறு பயிடுவதற்காக மீளாய்வாய்வாண்டின் போது ரூபா 2.46 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தனமல்வில பண்ணையில் ரூபா 600,000 செலவு செய்து நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ரூபா 1,454,000 செலவு செய்து யானை வேலியொன்று நிர்மாணிப்பதற்கும் மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதிடப்பட்ட செலவினத்தையும் உள்ளபடியான செலவினத்தையும் பரீட்சித்த போது செலவினத்தில் 2.3 சதவீத முதல் 232 சதவீதம் வரையான அளவில் முரண்கள் வெளிப்படுத்தப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீடு, செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் உள்ளவாறான செயலாற்றலுடன் காலரீதியாக மீளாய்வு செய்யப்பட்டு முரண்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஆம் ஆண்டில் 19 விவசாயிகளுக்கு விவசாய நிலத்திற்கு நீரிறைக்கும் இயந்திரங்களைப் பெறுவதற்கு வழங்கப்பட்ட ரூபா 80,610 கடனை அறவிடுவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி சபைக்குச் சட்டபூர்வமாக உரித்தில்லாத காணி ஒன்றில் வேலியும் நுழை வாயிலும் அமைப்பதற்கு ரூபா 2,548,050 பெறுமதியிலான ஒப்பந்தம் ஒன்று சட்டபூர்வமற்ற விதத்தில் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தக்காரருக்கு சபை பணம் செலுத்தாததால் ரூபா 3,209,728 ஆன இழப்பீட்டுத் தொகையை வழங்குமாறு ஒப்பந்தக்காரரால் சட்ட நிறுவனம் ஒன்றினூடாக சபைக்கு எதிராக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி அறிவிப்பு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய வழக்கு விசாரணை 2015 ஆகஸ்ட் 28 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னாள் உப தலைவர் 2011 ஆம் ஆண்டில் கடன் அடிப்படையில் ரூபா 64,500 பெறுமதியான சுவபோஷா மற்றும் மவ்போஷா பக்கற்றுக்களை பெற்றிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அத்தொகை அவரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 09 உத்தியோகத்தர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 42,080 தொகையான பல்வேறு கடன் மற்றும் முற்பண மீதிகள் 10 ஆண்டுகளாக நிலுவையாக இருந்த போதிலும், அத்தொகையை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது.

(உ) 2011 ஆம் ஆண்டிலிருந்து நெற் சந்தைப்படுத்தும் சபைக்குச் செலுத்த வேண்டிய ரூபா 3,300,000 தொகையைத் தீர்த்து வைப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2012 ஒக்டோபர் 01 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவால் பரிந்துரைக்கப்பட்டதன் பிரகாரம் சபையின் திருத்திய சட்டமூலம் 2015 ஆகஸ்ட் 28 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2012 ஆம் ஆண்டின் போது நாரஹேன்பிட்டி விற்பனை நிலையத்தில் இடம்பெற்றிருந்த ரூபா 77,352 ஆன பணத் திருட்டு தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இவ்விற்பனை நிலையத்தின் சிறாப்பராக சேவை புரிந்த மூன்று அலுவலக உதவியாளர்களும் அப்பதவியில் கடமை புரிவதற்கு எழுத்துமூல ஒப்படைப்பொன்றைச் செய்வதற்கும் பிணையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் சுருக்காமாக |
|---|---|---|
| (அ) | நிதிக் கட்டுப்பாடு | - பாதிடப்பட்ட செலவினங்களுக்கும் உள்ளபடியான செலவினங்களுக்குமிடையே போதியளவான விலகலொன்று வெளிப்படுத்தப்பட்டமையும் கடன் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையும் |
| (ஆ) | பதவியணியினர் நிர்வாகம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக பதவியணியினர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர் |
| (இ) | செயற்திட்ட முகாமைத்துவம் | திட்டமிடப்பட்டதன் படி செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாமை மற்றும் செயற்திட்டதிலிருந்து நட்டம் அடைந்தமை |
| (ஈ) | சொத்துக் கட்டுப்பாடு | சபைக்குரிய காணி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (உ) | ஒப்பந்த நிர்வாகம் | சபைக்கு உரித்தில்லாத காணிகளில் நிர்மாணத்திற்கான ஒப்பந்தங்களை வழங்குதல் |